# யாழ். போதனா நிர்வாகத்துக்கு எதிராக நாளை முதல் போராட்டம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதிராக நாளை புதன்கிழமை முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யத்தவறியமை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தைத் தக்க வைப்பதற்காக மருத்துவமனை ஊழியர்களிடையே தொடர்ந்தும் சர்ச்சைகளை உருவாக்கும் முயற்சிகளைத் தொடர்ச்சியாக வைத்தியசாலைப்பணிப்பாளர் மேற்கொண்டு வருவதை எதிர்த்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நாம் தீர்மானித்துள்ளோம்.

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 14 புதன்கிழமை 26.02.2025 கதிர் 137




### உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான

# சங்கு சின்னக் கூட்டணிக்குள் இன்னமும் இணக்கம் இல்லை

## 9 கட்சிகளில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இன்றைய சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை



யாழ்ப்பாணம், பெப். 26

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தமிழ்க் கட்சிகளின் இரண்டாவது கலந்துரையாடல் இன்று நடைபெற்றது.

இன்று முற்பகல் யாழ். திருநெல்வேலியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி விடயம் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் முதலாவது சந்திப்பு கடந்த 23 ஆம் திகதி யாழ். இணுவில் பகுதியில் இடம்பெற்றிருந்த நிலையில் இன்று இரண்டாவது சந்திப்பு நடைபெற்றது.

இன்றைய சந்திப்பில் தமிழீழ மக்கள் 2➤

# முல்லைத்தீவில் சிறுவன் ஒருவர் சடலமாக மீட்பு!



முல்லைத்தீவு, பெப். 26

முல்லைத்தீவு, வற்றாப்பளைப் பகுதியில் 16 வயதுடைய சிறுவன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உறவினர் வீட்டுக்குச் சென்ற

# சி.ஐ.டியில் முன்னிலையான நாமல் நான்கரை மணிநேரம் வாக்குமூலம்



கொழும்பு, பெப். 26

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முன்னிலையானார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செய்த எயார் பஸ் விமானக் கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் இன்று குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் முன்னிலையானார்.

2➤

# மின்னல் தாக்கி மீனவர் மரணம்

கற்பிட்டி, பெப். 26

புத்தளம் மாவட்டம், கற்பிட்டி - கண்டக்குளி கடற்பரப்பில் நேற்று மாலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மூவரின் மீது மின்னல் தாக்கி ஒருவர் கடலில் வீழ்ந்து உயிரிழந்துள்ளதுடன் மற்றைய இருவரும் மயங்கிய நிலையில் படகுகளுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

2➤

# காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை 3 நாட்கள் இரத்து!



யாழ்ப்பாணம், பெப். 26

காங்கேசன்துறை நாகப்பட்டினத்துக்கு இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கப்பல் போக்குவரத்து ஆரம்பமாகி 4 நாட்கள் நடைபெற்ற நிலையில் மீண்டும் 3 நாட்களுக்கு இரத்துச் 2➤

# ஆண் ஒருவர் சடலமாக மீட்பு



கம்பஹா, பெப். 26

கம்பஹா மாவட்டம், கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்தேகம பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றின் அறையிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 15 பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடையவர் நபரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

சடலமாக மீட்கப்பட்டவர் குறித்த விற்பனை நிலையத்தில் தனியாக வசித்து வந்துள்ளார் எனவும், அவர் அதிகளவில் மதுபானம் அருந்துபவர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் பூகொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். போதனா....

நாங்கள் தொடர்ச்சியாக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தோடு இரண்டு மாதங்களாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வந்த நிலையிலும் நோயாளர்களின் பாதுகாப்பை யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகம் உறுதி செய்யத் தவறியமையால், தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பின்வரும் காரணங்களுக்காகவே நாம் எமது தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம்.

1. நோயாளர் அவசர சேவைகளுக்கான பிரிவுகளுக்கு ஆளணிப் பற்றாக்குறையாகவும் அதேநேரம், சாதாரண பிரிவுகளுக்கு அதிகமான ஆளணியும் பொருத்தப்பாடற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதனால் நோயாளரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் உள்ளது.

2. யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக விபத்து, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் ஒரு ஆபத்தான பணியாளரைப் பொறுப்பில் இருத்தி, அர்ப்பணிப்பான பணியாளரை இடம் மாற்றியுள்ளமை நோயாளிகளின் உயிராபத்துக்கேதுவான பாதகமான நிலைமை நிலையை உருவாக்கியுள்ளது.

3. சில ஊழியர்களின் பொறுப்புணர்ச்சி அற்ற நடவடிக்கைகள் தொடர்பாக வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியபோதும் அவர்களைத் திருத்துவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் மருத்துவ நிபுணர்களால் தகவல்கள் கோரப்படும்போது தவறான தகவல்களை வழங்குவதுடன் தகவல்களை வழங்குவதில் தாமதம் செலுத்துதல்.

5. வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் உள்ள அனைத்து நோயாளிகளினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வரை தொழிற்சங்க நடவடிக்கையாக, அதிதீவிர சிகிச்சை தவிர்ந்த சாதாரண பணிகளையும் இடைநிறுத்த முடிவு செய்துள்ளோம்.

இது நோயாளரின் நலன் கருதி எடுக்கப்பட்டுள்ள முடிவு என்பதனால் நீண்டகால நோக்கிலான சரியான முடிவுகள் எட்டப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர வாய்ப்புள்ளது. இதனால் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்பதனை மன வருத்தத்துடன் நாம் தெரிவித்துக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

## சி.ஐ.டியில் ......

இந்தநிலையில், அவர் நான்கரை மணிநேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

## சங்கு சின்னக......

விடுதலைக் கழகம் (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகத் தமிழரசுக் கட்சி, சமத்துவக் கட்சி ஆகிய 8 கட்சிகள் சார்பில் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டணியில் தமிழ் மக்கள் கூட்டணி இணைவதா இல்லையா என்பது தொடர்பான முடிவு கட்சியின் செயலாளர் நாயகத்துடன் பேசி விரைவில் அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் சார்பில் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

## காங்கேசன்துறை......

செய்யப்பட்டுள்ளது என்று குறித்த கப்பல் நிறுவனம் தெரவித்துள்ளது.

தமிழகத்தில் பெய்துவரும் கனமழை மற்றும் மோசமான காலநிலையைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மோசமான காலநிலை காரணமாக கப்பலை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும், அதனால் இன்று முதல் நாளை மறுதினம் வரை கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றது எனவும் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மார்ச் 1ஆம் திகதி முதல் கப்பல் போக்குவரத்து வழமைக்குத் திரும்பும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்னல் தாக்கி.....

கடலில் வீழ்ந்தவரின் சடலம் இதுவரை மீட்கப்படவில்லை. சடலத்தைத் தேடும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

உயிர் தப்பிய இருவரும் 28 மற்றும் 46 வயதுடையவர்கள்.

மேற்படி இருவரிடமும் கற்பிட்டி பொலிஸார் மற்றும் புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# சிறைச்சாலைகளில் நவீன தொழில்நுட்பம் மூலம் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை!



நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி சிறைச்சாலைகளின் பாதுகாப்பை பலப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நீதிமன்றத்தில் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னரே இந்த விசேட பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தொலைபேசி இணைப்பு தடுப்பு சாதனம் (ஜேமர்) சேர்க்கப்படவுள்ளது.

சிறைச்சாலைகளில் ஏற்கனவே ஜேமர்கள் பொருத்தப்பட்டிருந்தாலும், கட்டிடங்களின் தன்மை காரணமாக தொலைபேசி இணைப்புகளை முற்றிலுமாகத் துண்டிக்க முடியவில்லை என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் ஜேமர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை நெறிப்படுத்துமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பொருத்தப்பட்டுள்ள ஜேமர்களின் குறைபாடுகள் காரணமாக, கைதிகள் தொலைபேசி இணைப்புகள் மூலம் வெளியாட்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் அதிகரித்துள்ளதோடு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தங்கள் விருப்பப்படி போதைப்பொருள் வலைப்பின்னல்களையும் குற்றங்களையும் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உயர்மட்ட சந்தேக நபர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள பூஸா போன்ற சிறைகளில், அவ்வப்போது கையடக்க தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால், இவ்வாறான குற்றங்களில் இருந்து தடுப்பதற்காக சிறைச்சாலைகளின் பாதுகாப்பை பலப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கிராண்ட்பாஸ் பகுதியில் கத்திக்குத்து! மூவர் வைத்தியசாலையில் அனுமதி!!

கொழும்பு, பெப். 26

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் இன்று கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவத்தில் மூவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிராண்ட்பாஸ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இஷாராவின் தாய் மற்றும் சகோதரரை தடுப்பு காவலில் வைக்க உத்தரவு!



கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட, பிரதான பெண் சந்தேக நபர் இஷாராவின் தாய் மற்றும் சகோதரரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் கொழும்பு குற்றவியல் பிரிவால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தொடரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவம்!



மினுவாங்கொடை பகுதியில் இன்று காலை 11.00 மணியளவில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மினுவங்கொடை, பத்தடுவன சந்தியில் வைத்து மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த அடையாளந்தெரியாத இருவர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் 36 வயதுடைய நபர் ஒருவர் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கி சூட்டை நடாத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# மிதி வெடி

என்ன தான் "(**)க் குளிப்பாட்டி நடு வீட்டுக்குள் வைத்தாலும்." பழமொழி இப்ப ஆட்சியில இருக்கிறவைக்குக் கனகச்சிதமாப் பொருந்துது பாருங்கோ.

"வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற தொனிப்பொருளோடு "ஊழலற்ற ஆட்சி" எண்டு சொல்லி வாக்கெடுத்தவை எல்லாரும் இண்டைக்கு முந்தி இருந்தவைய விட மோசமா நடக்கினம் எண்டு எல்லாரும் கதைக்கினம்

முந்தி இருந்தவை தாங்கள் அப்பிடித்தான் - அப்பிடித்தான் நாங்கள் செய்வம் எண்டு சொல்லிச் சொல்லிச் செய்தவை ஆனா அவை செய்தது எல்லாத்துக்கும் முடிவு கட்டுவம் எண்டு சொல்லி வாக்கு (பொறுக்கி) வாங்கி ஆட்சிக்கு வந்தவை, முந்தி இருந்தவைக்குக் கொம்பு
தூக்கின ஆக்கள் சொல்லுறபடி தான் நடக்கினமாம்..

முன்னொரு காலத்தில தியேட்டரில ஒட்டிக்கொண்டு நிண்ட பல்லிகள் எல்லாம் - முதலாம் குறுக்குத் தெருவிலயும் போய், முதலாம் நம்பர் காரனோட நண்பராகினவை எல்லே? அவை எல்லாரும் இப்பப் பலாலி வீதியில பாய் போட்டுப்படுத்திருக்கினமாம்..

பிள்ளையள் - குட்டியள், அல்லையள் - தொல்லையள் இல்லாத போல, அங்கயே நிண்டு "அடிமட்டத் தொண்டர்களாக" நிக்கிற அத்தனை தோழர்களையும் பார்த்த "பெரிய" தோழருக்கு கடும் சந்தோசமாம்.

பத்து மணிக்குப் பிறகும் பதறாமல் நிண்டு கட்சி வேலை பாக்கினம் எண்டு அவருக்குக் கடும் சந்தோசமெண்டாப் பாருங்கோவன்..?

உப்பிடித் தான் உவையள் எல்லாரும் போய் நிண்டு தங்கட காரியங்களைக் கொண்டு நடத்திப்போட்டு, இப்ப அந்தாளைப் "பொத்தெண்டு" கைவிட்டுட்டுப் போயிற்றினம் எண்டு இன்னொரு மனுசன் ஊருலகத்தில நடக்குற செத்த வீடுகளில புலம்பித் திரியுது.

இப்ப அரசியல் வேலை அவ்வளவு இல்லாதபடியால அந்த மனுசன் நல்லது - கெட்டது ஒண்டையும் தவற விடுறேல்ல. போன கிழமைக்கு முந்தின கிழமை என்ற சகபாடி - ஒரு வகையில சொல்லப் போன எனக்கு அண்ணன் மாதிரி அந்தாளின்ர செத்த வீட்டுக்கு வந்த இடத்தில தான் மனுசன் என்னட்ட புலம்பித் தள்ளிச்சு.

தன்னுடைய கை "ஓங்கி" இருக்கேக்க வந்து நிண்டு பெரிய பள்ளிக்கூடப் பேரவைக்காரரைக் கொண்டு "அதைச் செய்து தாங்கோ.." , "இதை இப்பிடி முடியுங்கோ" எண்டு சொன்னவை எல்லாரும் இப்ப பலாலி றோட்டில போய் நிண்டு பல்லிழிக்கினமாம்! அவையளும் ஆர் என்ன சொன்னாலும் படிச்சவை எங்களோட நிக்கினம் எண்டால் அது எங்களுக்குப் பெருமை தானே எண்டு அவை சொல்லுறதெல்லாத்துக்கும் "ஆமா" போடுகினமாம்

ஏற்கனவே பனை அபிவிருத்தி சபைக்கு ஒருத்தரைத் தலைவராப் போட்டுட்டு, அந்தக் கடிதம் அங்கயிருந்து இங்க வாறதுக்குள்ள இன்னொருத்தரை மாத்தி இருக்கினம்.

அவர் ஒரு ஊர் அடிபட்ட "காக்கா" எண்டது அவரைப் போடச் சொன்னவருக்கு மட்டும் தான் தெரியும். அங்க இருக்கிற மேலிடங்கள் ஒண்டுக்கும் தெரியாது.

அவரைப் போட்ட பிறகு, அவர் பண்ணுற "அட்டாதுட்டி" சொல்லி மாளாது பாருங்கோ. ஏற்கனவே தியேட்டர்காரனோட, அவற்றை தயவில வாழ்ந்த இவர், சபைக்குப் போனால் தியேட்டர்காரனால நியமிக்கப்பட்டவர் தான் "ஜி.எம்".

பிறகென்ன சொல்லவே வேணும். ஒரே ஆட்டம் - பாட்டம் - கொண்டாட்டம் தானாம்.

இது போதாதெண்டு இலஞ்சம் - ஊழல் அதிகார துஸ்பிரயோகம் - ஆள்மாறாட்டம் எண்டு அத்தனைக்கும் பேர் போன மாவட்ட நிர்வாகம், பனை வளத்தோட நல்ல மாதிரியாம். பதில் கடமையில இருக்கிறவருக்குப் "பேர்மனன்ற்" வாங்கிக் குடுக்காமல் ஓய மாட்டன் எண்டு நிக்கிறாராம்.

பனை வளத்தோட சேர்ந்து கடல்வளம் போன கிழமை "கபின்ற் அப்ரூவல்" வாங்கிப் போடவேணும் எண்டு துடியாத் துடிச்சவராம். இங்கினேக்க இருந்து ஆரோ நல்லவை நாலு பேர் சொன்ன கதையால "பேர்மனன்ற் பேப்பர்" "போஸ்போன்ற்" ஆகிற்றாம்.

இதுக்குள்ள இன்னுமொரு விசியமும் கேள்விப்பட்டன். "வளமான நாடு - அழகான வாழ்க்கை" எண்டு சொல்லிக் கொண்டு ஊழல்காரரையும், உறவுக்காரரையும் தான் உள்ளுக்கு எடுக்குது "என்.பி.பி" அரசாங்கம் எண்டதுக்கு இன்னுமொரு நல்ல உதாரணம்

ஆட்சி அதிகாரத்துக்குப் புதுசு எண்டதால நாலு படிச்சவையக் கூட்டுச் சேர்த்து வைக்கிறது பேருக்காக எண்டாலும் பலமா இருக்கும் தானே எண்டு "ப்ரொபெஷனல்ஸ்" எண்டு "குறூப்" வைச்சிருக்கினமாம்

சபை முதல்வர் தான் இவையள் எல்லாருக்கும் இணைப்பாளர். அவருக்கு இங்க இருந்து "ரீ" எண்ட ஒருத்தர் தான் "கூஜா". "ரெயில்வே"யில செய்யுற வேலைக்கு மேலதிகமா இங்க இருக்கிற படிச்சவை எல்லாருமாப் பகிர்ந்தளித்து "படி" அளக்கினமாம்".

அவரும் ஏற்கனவே செத்த ஆளுக்குக் காசு சேர்த்துக் குடும்பத்துக்குக் குடுக்காமல் குளறுபடி பண்ணின ஆளாம்..

உதெல்லாம் என்னத்துக்குத் தெரியுமே? தங்கட அக்கா - தங்கச்சிமாரையும், தங்களோட கூட்டாக் களவு செய்த ஆக்களையும் பேரவையில போடுறதுக்குத் தானாம்.

ஏற்கனவே இவை குடுத்த "லிஸ்ற்" ல இருந்தவை ஒருத்தரும் பொருத்தமில்லாதவை, எல்லாருக்கும் உறவுகள் உள்ளுக்க வேலை செய்யினம் எண்டும் வடக்கு நிர்வாகி வெட்டி அனுப்ப, அதன்படி நியாயமான முறையில ஆணைக்குழு ஆக்களப் போட்டு "லிஸ்ட்" ஒண்டு "ரெடி" பண்ண, பின் கதவால போய் காரியம் செய்து பழக்கப்பட்டவர்கள் "மினிஸ்றி லெவல்' ஆக்களப் பிடிச்சு எல்லாருமாச் சேர்ந்து மாத்தி இருக்கினமாம்.

புது"லிஸ்ற்" வர, புட்டுக்கேடு எல்லாம் "ப்றூஃப்" பண்ணுப்படும் தானே எண்டு அனுரவுக்கும், அம்மணிக்கும் சில நேர்மையான "என்.பி.பி" ஆக்கள் கடிதம் அனுப்பி இருக்கினமாம்

இப்ப அதுவுமில்லை - இதுவுமில்லை எதுவும் இல்லா நிலமையில ஆகப் போறதும் ஒண்டுமில்லைப் பாருங்கோ

எங்கட ஆக்களால தான் எங்களுக்கு இந்த நிலமை. உண்மை தெரிய வரும் தானே? கொஞ்ச நாள் பொறுத்திருந்து பாப்பம்..!

அப்பப் பாருங்கோவன் ஆட்சி மாறினாலும் காட்சி மாறேல்ல" எண்டு அவங்கள் சொல்லுறதிலயும் தப்பு இல்லப் போல தான் கிடக்கு. அதிகாரத் துஸ்பிரயோகம், அடி-தடி, கட்டப்பஞ்சாயத்து, அறா வட்டிக்காரனுக்குத் தான் இந்த ஆட்சியிலயும் யோகம் அடிக்குது.

என்ன? நான் சொல்லுறது சரி தானே?

-நரமுனி-

# இராணுவ விமானம் மோதி பயங்கர விபத்து பொதுமக்கள் உட்பட 46 பேர் உயிரிழப்பு



சூடானில் ராணுவ விமான விழுந்து ஏற்பட்ட பயங்கர விபத்தில் 46 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 10 பேர் படுகாயமடைந்தனர். ஓம்துர்மான் (Omdurman) நகருக்கு கிழக்கே உள்ள வாடி சாயிட்னா (Wadi Sayidna) ஏர் பேஸில் இருந்து ஆன்டோனோவ் ஏர்கிராப்ட் நேற்று டேக் ஆப் செய்யப்பட்டு வானில் பறந்துகொண்டிருந்தது.

ஓம்துர்மானில் உள்ள கராரி மாவட்டத்தில் மக்கள் வசிக்கும் பகுதியில் வீடு ஒன்றின் மேல் விமானமானது மோதி வெடித்து விபத்துள்ளது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து தெரியவில்லை. இதில் விமானத்தில் பயணித்த ராணுவ வீரர்கள் மற்றும் வீடு உள்ள பகுதியிலிருந்த பொதுமக்கள் உட்பட 46 பேர் உயிரிழந்துள்ளதுள்ளதாக அரசு அதிகாரிகள் இன்று தெரிவித்தனர்.

சூடானில் கடந்த 2023 ஆம் ஆண்டு பாராளுமன்ற படைகளுக்கும், ராணுவ படைகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதில் இருந்து உள்நாட்டு போர் தீவிரமடைந்துள்ளது. இதனால் நாடு முழுவதிலும் கூட்டுப் பாலியல் வன்கொடுமைகள், திட்டமிட்ட இனப்படுகொலைகள் உள்ளிட்ட போர் குற்றங்கள் நடந்து வருகிறது.

# எலான் மஸ்கின் காலை முத்தமிட்டாரா ட்ரம்ப்?




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உலகின் மிகப் பெரும் கோடிஸ்வரரான எலான் மஸ்க்கின் காலில் முத்தமிடுவது போன்ற வீடியோவொன்று அமெ ரிக்காவின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம் பாட்டுத்துறை (HUD) தலைமையகத்தின் Cafeteria (கஃபேட்டிரியா) திரைகளில் ஒளிபரப்பாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட குறித்த வீடியோவில் "நிஜ ராஜா நீடூழி வாழ்க"(LONG LIVE THE REAL KING) என்ற வாசகமும் இடம்பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இச் சம்பவம் HUD இன் பாதுகாப்பு அமைப்புகளில் ஏற்பட்ட பலவீனத்தை எடுத்துக்காட்டுகிறது எனவும் இது டொனால்ட் ட்ரம்புக்கு பெரும் அவமானத்தை தேடித் தந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த சம்பவம் இடம்பெறக் காரணமானவர்கள் யார் என்பது தொடர்பில் தீவிர விசாரணை இடம்பெற்று வருவதாக HUD செய்தித் தொடர்பாளர் கேசி லவெட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த வீடியோவானது தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் நிலையில், உண்மையில் அது தான் வெள்ளை மாளிகையில் நடக்கிறது எனவும் சில அமெரிகர்கள் விசனம் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேஷியாவில் 6.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம்!

இந்தோனேசியாவின் சுலவேசி தீவின் கடற்கரையில் புதன்கிழமை (26) அதிகாலை 6.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் (USGS) தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் காரணமாக உடனடி சேதமோ, உயிரிழப்புகளோ ஏற்படவில்லை.

USGS தரவுகளின்படி, அந் நாட்டு நேரப்படி காலை 6:55 மணிக்கு (22.55 GMT) 10 கிலோ மீட்டர் (6.2 மைல்) ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அதன் மையப்பகுதி வடக்கு சுலவேசி மாகாணத்திற்கு அருகில் உள்ளது.

இந்தோனேசியாவின் வானிலை ஆய்வு மையம் 6.0 ரிக்டர் அளவில் பதிவானதாகவும், இதனால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை என்றும் உறுதிப்படுத்தியது.

பசுபிக் "ரிங் ஆஃப் ஃபயர்" பகுதியில் அமைந்துள்ள இந்தோனேசியா, டெக்டோனிக் தகடுகள் அசைவுகளால் அடிக்கடி நிலநடுக்கங்களுக்கு முகங்கொடுக்கின்றது.

சுலவேசி பகுதியில் கடந்த காலங்களில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

2021 ஜனவரியில் 6.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் 100 க்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றது மற்றும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

2018 ஆம் ஆண்டில், பாலுவில் 7.5 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம், சுனாமி காரணமாக 2,200 க்கும் அதிகமானோர் இறந்தனர்.

இந்தோனேசியாவின் அண்மைய வரலாற்றில் மிக மோசமான நிலநடுக்கம் 2004 ஆம் ஆண்டில் ரிக்டர் 9.1 அளவில் பதிவான பேரழிவு ஆகும்.

இது சுனாமியைத் தூண்டி 170,000 க்கும் அதிகமான உயிர்களைக் கொன்றது.

# காசாவில் கடுங்குளிரால் உயிரிழந்த 6 குழந்தைகள் மருத்துவ வசதி இன்றி தவிக்கும் 7,700 குழந்தைகள்

குளிர்காலம் தொடங்கியதிலிருந்து குளிரால் உயிரிழந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 15-ஐ எட்டியுள்ளது

பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் பணி நிறுவனம் எச்சரித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட காசாவில் சமீபத்திய நாட்களில் வெப்பநிலை மிகவும் குறைந்துள்ளது. கடலோரப் பகுதிகளில் குளிர்ந்த, ஈரமான சூழல் நிலவுகிறது. இரவில் வெப்பநிலை 10° செல்சியஸ்'க்குக் கீழே குறைகிறது.

காசா பகுதியில் குளிர் அலை காரணமாக இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. காசாவின் சுகாதார அதிகார சபையின் இயக்குநர் ஜெனரல் முனீர் அல்-பர்ஷ் நேற்று (செவ்வாய்க் கிழமை) பேசுகையில், கடுமையான குளிரால் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

குளிர்காலம் தொடங்கியதிலிருந்து குளிரால் உயிரிழந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 15-ஐ எட்டியுள்ளது என்று கூறினார். மருத்துவ வசதிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம், சுகாதார சேவைகளைப் பாதித்துள்ளதால், சுகாதார நெருக்கடி மோசமடையக்கூடும் என்று அவர் எச்சரித்தார்.

மருத்துவமனைகள் ஐகுறிப்பாக குழந்தைகள் மருத்துவமனைகள்ஸ மருந்து, உபகரணங்கள் பற்றாக்குறை மற்றும் அடிக்கடி மின்வெட்டு காரணமாக தேவையான சிகிச்சையை வழங்குவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

காசா நகரத்தில் உள்ள 'நோயாளிகளின் நண்பர்கள்' என்ற தொண்டு மருத்துவமனையின் இயக்குனர் சையத் சலா பேசுகையில், கடந்த சில மணிநேரங்களில் கடுமையான குளிர் மற்றும் தங்குமிடங்களில் வெப்பமின்மை காரணமாக மூன்று குழந்தைகள் இறந்துவிட்டதாகக் கூறினார்.

காசாவில் சமீபத்திய நாட்களில் பலத்த காற்று, கனமழை மற்றும் மிகவும் குளிரான வானிலை நிலவுகிறது. மோசமான வானிலை நூற்றுக்கணக்கான கூடாரங்களை அழித்துள்ளது. பல அகதி முகாம்களை வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் கஷ்டங்களை அதிகரித்துள்ளது.



காசாவில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு அதிகரித்து வரும் ஆபத்துகள் குறித்து பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண பணி நிறுவனம் எச்சரித்துள்ளது.

மோசமான நிலைமைகள் மற்றும் பாதுகாப்பான தங்குமிடங்களின் கடுமையான பற்றாக்குறை காரணமாக 7,700 குழந்தைகள் அத்தியாவசிய மருத்துவ உதவியை பெற முடியவில்லை அவ்வமைப்பு தெரிவிக்கிறது.

# நாகை-இலங்கை கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தம்!



தமிழ்நாட்டின் நாகை -இலங்கை காங்கேசன்துறை 'செரியா பாணி' பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது

அதன்படி நாகை-இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து இன்று 26-ந்திகதி முதல் 28-ந்தேதி வரை கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் மார்ச் 1-ந் திகதி முதல் கப்பல் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெறும் என கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது

தமிழ்நாட்டின் நாகை துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறை துறைமுகம் வரை இந்தியா-இலங்கை இடையே கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ந்திகதி 'செரியா பாணி' என்ற பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது.

பின்னர் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்த நிலையில் பாதுகாப்பு காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன் தற்காலிமாக சேவை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் இந்தாண்டுக்கான கப்பல் போக்குவரத்து இம்மாதம் 22-திகதி ஆரம்பமாகிய நிலையில் தமிழ்நாட்டில் 28-திகதி வரை பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது

மேலும் நாகை-இலங்கை இடையே நீண்ட நாள் இடைவெளிக்குப் பிறகு கப்பல் போக்குவரத்து தொடங்கி 4 நாட்கள் நடைபெற்ற நிலையில் மீண்டும் 3 நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது சுற்றுலாப் பயணிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# தமிழக வெற்றிக் கழகத்தின் 2ஆம் ஆண்டு ஆரம்ப விழா 'Get Out' கையெழுத்து இயக்கமும் ஆரம்பம்!




தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு ஆரம்ப விழா மாமல்லபுரம் அருகே பூஞ்சேரியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

அதன்படி விழா மேடைக்கு வந்த விஜய்க்கு தொண்டர்கள் வரவேற்பு அளித்ததுடன் அதனை தொடர்ந்து த.வெ.க. இரண்டாம் ஆண்டு ஆரம்ப விழா தொடங்கியது.

முதலில் விழா மேடைக்கு வந்த விஜய்க்கு பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அதன்பின்னர் தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோருக்கும் பூங்கொத்து கொடுத்து வரவேற்றிருந்தனர்

இதனை தொடர்ந்து **'Get Out'** கையெழுத்து இயக்கத்தை த.வெ.க. தலைவர் விஜய் ஆரம்பித்து வைத்தார்.

அதனை தொடர்ந்து கலை நிகழ்ச்சி தொடங்கியதுடன் 2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று த.வெ.க. ஆட்சியமைக்க போகுது' கண்டா வரச்சொல்லுங்க பாடல் புகழ் பாடகி கிடாக்குழி மாரியம்மாள் பாடலை பாடினார். இதனை தொடர்ந்து விஜய்க்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்திய மாரியம்மாளுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்த விஜய் புத்தகத்தை பரிசாக வழங்கி குழுவினருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

இதனிடையே, பா.ஜ.க.வில் இருந்து விலகிய ரஞ்சனா நாச்சியார் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைய வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறுவனின் வயிற்றில் வளர்ந்த 2 கால்களை அகற்றி எய்ம்ஸ் மருத்துவர்கள் சாதனை



உத்தரபிரதேசத்தை சேர்ந்த 17 வயது சிறுவனுக்கு பிறக்கும் போதே வயிற்றில் 2 கால்கள் வளர்ந்துள்ளது.

இதனால் சிறுவனை பள்ளிக்கூடத்தில் பலர் கேலி செய்துள்ளனர்.

தலைநகர் டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில், நான்கு கால்களுடன் பிறந்த 17 வயது சிறுவனின் தேவையற்ற 2 கால்களை அறுவை சிகிச்சை செய்து அகற்றி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

உத்தரபிரதேசத்தின் பாலியாவைச் சேர்ந்த 17 வயது சிறுவனுக்கு பிறக்கும் போதே வயிற்றில் 2 கால்கள் வளர்ந்துள்ளது. இதனால் சிறுவனை பள்ளிக்கூடத்தில் பலர் கேலி செய்துள்ளனர். இதனால் மனமுடைந்த சிறுவன் படிப்பை நிறுத்தியுள்ளான்.

இந்நிலையில், சிறுவனின் உடலில் தேவையின்றி வளர்ந்துள்ள 2 கால்களை எய்ம்ஸ் மருத்துவர்கள் வெற்றிகரமாக அகற்றியுள்ளனர்.

இது தொடர்பாக பேசிய எய்ம்ஸ் மருத்துவமனையின் அறுவை சிகிச்சை துறையின் கூடுதல் பேராசிரியர் டாக்டர் அசுரி கிருஷ்ணா, "இரட்டையர்கள் கருத்தரிக்குபோது, அவர்களில் ஒருவரின் உடல் வளர்ச்சியடையாமல், அதன் உறுப்புகள் மற்ற குழந்தையின் உடலுடன் இணைக்கப்படும் இதுபோன்ற நிகழ்வுகள் ஒரு கோடி பேரில் ஒருவருக்கு மட்டுமே ஏற்படுகிறது" எபின்ரு தெரிவித்தார்.

உலகம் முழுவதும் நான்கு கால்களுடன் 42 பேர் மட்டுமே பிறந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பண்ணையாளர்களை அரசியலை விட்டு அகற்றுவதே இலக்கு

## விஜய் தெரிவிப்பு



தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவில் அதன் தலைவர் விஜய் My Friend, My Brother என பேசத் தொடங்கிய விஜய் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற பிரசாந்த் கிஷோருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். இதனை தொடர்ந்து என் நெஞ்சில் குடியிருக்கும் என்று கூறி உரையை தொடங்கிய விஜய்,

* தமிழகத்தில் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. வரலாறு படைக்கும்.

* அரசியல் என்றால் வேற வெலல் தான். அரசியலில் மட்டும் தான் வித்தியாசமான ஒன்றாக நாம் பார்க்கலாம்.

* அரசியலில் யார் யாரை எப்போது எதிர்ப்பார்கள் என தெரியாது.

* அரசியலில் மட்டும் தான் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை.

* மக்களுக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சுப் போன ஒருவன் அரசியலுக்கு வந்தால், ஒரு சிலபேருக்கு மட்டும் எரிச்சல் வராத்தானே செய்யும்.

* இதுவரை நாம் சொன்ன பொய்யெல்லாம் நம்பி மக்கள் ஒட்டுபோட்டனரே, இவனை எப்படி நாம் ஊடழுளந பண்ணலாம் என நினைப்பர்.

* குழப்பத்தில் கத்துவதா? கதறுவதா என தெரியாமல் விமர்சனம் செய்கிறார்கள்.

* வருகின்ற எதிர்ப்பை எல்லாம் Left Handy டீல் செய்து த.வெ.க. இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

* கட்சியை பலப்படுத்தும் பணியை செய்து வருகிறோம்.

* வேரையும் விழுதுகளையும் பலப்படுத்தும் வேலையை தான் நாம் செய்து வருகிறோம்.

* அண்ணா கட்சி ஆரம்பித்த போது பின்னால் நின்றவர்கள் இளைஞர்கள்.

* நமது கட்சி எளிய மக்களுக்கான கட்சி, பண்ணையாளர்களுக்கான கட்சி அல்ல.

* தவெக பண்ணையாளர்களுக்கான கட்சி அல்ல. சாதாரண மக்களுக்கான கட்சி. அதனால் இங்கு சாதாரண மக்கள் இருப்பர்.

* பண்ணையாளர்களை அரசியலை விட்டு அகற்றுவதே முதல் வேலை.

இவ்வாறு விஜய் பேசினார்.




# “சாந்தன் துயிலாயம்” அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 26

“சாந்தன் துயிலாயம்” எதிர்வரும் வெள்ளிக்கிழமை சாந்தனின் தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில் காலை 9 மணிக்கு, சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட இடத்தில், சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள “சாந்தன் துயிலாயம்” தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

அரசுகளாலும், அரசியலாலும், சட்டத்தாலும் , கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக இது உருவாக்கப்பட்டுள்ளது

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார்.

அவரது விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் 33 வருடங்களாகப் போராடி வந்தனர். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவரை, மீள இலங்கைக்கு அழைத்து வர குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருட காலமாகப் போராடினார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் பலரும் பாராமுகமாகச் செயற்பட்ட நிலையில் , இலங்கை ஜனாதிபதி, பிரதமர் முதல் இந்திய அரசியல் தலைவர்கள் முதல் சாந்தனின் விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் மன்றாடி வந்த நிலையில், எவரும் கண்டுகொள்ளாத நிலையில் , அவரது உயிரற்ற உடலையே இலங்கை கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# குஷ் ரக போதைப்பொருளுடன் கைதான இந்திய பெண்!

குஷ் ரக போதைப்பொருளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இன்று அதிகாலை பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய இந்தியப் பெண் என தெரியவந்துள்ளது.

குறித்த பெண் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

தாய்லாந்திலிருந்து ஹொங்கொங் வழியாக இலங்கைக்குள் பிரவேசித்த குறித்த பெண் 12 மில்லியன் மதிப்புள்ள 1 கிலோ 200 கிராம் குஷ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். குஷ் போதைப்பொருளை தனது பயணப்பையில் உணவு பொதியொன்றில் மறைத்து வைத்து கொண்டு வந்துள்ளார்.

இதன்போது, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரும், மீட்கப்பட்ட போதைப்பொருளும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்மை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருளுடன் பதுளையில் ஒருவர் கைது!

பதுளை, பெப். 26

ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று இரவு நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

24 வயதுடைய சுவினிதகம பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு பதுளை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது பதுளை நகரில் சந்தேகத்துக்கிடமான நபர் ஒருவரைச் சோதனைக்கு உட்படுத்தியள்ளனர்.

இதன்போது மேற்படி நபர் சூட்சுமமான முறையில் தன் கைவசம் மறைத்து வைத்திருந்த 5400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளதாகப் பதுளை பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட தன் பின்னர் அவரைப் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகப் பதுளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




# மகா சிவராத்திரி தினம் இன்று!

மாசிமாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தியன்று அமாவாசைக்கு முதல் நாள் சிவராத்திரி விரதம் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம்சிவபெருமானை வழிபட்டால் கவலைகள் அனைத்தும் நீங்கும். காரிய வெற்றியும் ஏற்படும். ‘சிவாய நம’ என்று சிந்தித்திருந்தால் ‘அபாயம்’ நமக்கு ஏற்படாது,’உபாயம்’ நமக்கு ஏற்படும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

இந்தப் பிரபஞ்சம் மீண்டும் தோன்ற இறைவன் அருள் செய்த காலம் மகாசிவராத்திரி என்பதால் மிகுந்த சிறப்பினை உடையது என்கின்றன ஞான நூல்கள். அப்படிப்பட்ட மகா சிவராத்திரி நாளில் இரவு விழித்திருந்து சிவ வழிபாடு செய்தால் சகல நன்மைகளும் உண்டாகும் என்கிறார்கள் பெரியோர்கள்.

பொதுவாகச் சிவராத்திரி அன்று இரவு முழுவதும் நான்கு யாமம் பூஜை நடைபெறும், அன்று விரதம் கடைப்பிடிப்பவர்கள் சிவராத்திரி முந்தைய நாளில் ஒரு பொழுது மட்டும் உணவு உண்ண வேண்டும், சாயங்காலம் குளித்து விட்டு விரதத்தைத் தொடங்க வேண்டும்.

இரவு முழுவதும் நான்கு யாமம் பூஜையில் கலந்து கொண்டு மறுநாள் காலையில் சிவனை தரிசனம் செய்து விட்டு, தீர்த்தம் பருகி விரதத்தை முடித்துக் கொள்ள வேண்டும். மேலும் சிவராத்திரி இரவு வழிபாடு செய்பவர்கள் மறுநாள் முழுவதும் பகலில் உறங்காமல் இருக்க வேண்டும்.

மஹா சிவராத்திரி அன்று நான்கு ஜாமமும் சிவலிங்க பூஜையும், வழிபாடும் நடைபெற வேண்டும். சிவபூஜை வழிபாடு செய்வோர் முதற் ஜாமத்தின் போது மூலமூர்த்திக்கு பஞ்ச கவ்வியத்தினால் அபிஷேகம் செய்து சந்தனக்குழம்பு சாத்தி வில்வம், தாமரை, துளசி ஆகியவற்றால் அர்ச்சித்து பாசிப் பருப்பு நைவேத்தியமாக படைத்து பூஜை செய்ய வேண்டும்.

இரண்டாவது ஜாமப் பூஜையின் போது பஞ்சாமிர்தத்தினால் அபிஷேகம் செய்து அகில் குழம்பு சாத்தி, வில்வம், தாமரை துளசி ஆகியவற்றால் அர்ச்சித்து பாயாச நிவேத்தியம் வைத்து பூஜை செய்து வழிபட வேண்டும்.

மூன்றாம் ஜாமத்தின் போது தேன், அபிஷேகம், பச்சைக் கற்பூரம், சுண்ணம் சாத்தி, எள் அன்னம் நிவேதித்து பூஜை செய்ய வேண்டும்.

நான்காம் ஜாமம் பூஜையின் போது கரும்புச் சாற்றினால் அபிஷேகம் செய்து, குங்குமம் சாத்தி வில்வம் நந்தியாவந்தனம் கொண்டு அர்ச்சித்து சுத்த அன்னம் படைத்து பூஜை செய்யவேண்டும். அணுசக்தியை விட மந்திரசக்தி, யந்திர சக்தி பலம் வாய்ந்தவை. அதனால் மகா சிவராத்தியின் நான்கு காலங்களிலும் சிவ மந்திரங்களை உச்சரிப்பது மிகவும் சக்தி வாய்ந்தது ஆகும்.

மஹாசிவராத்திரி இரவு நாம் கண்விழித்து, தூங்காமல் நான்கு ஜாமப் பூஜையும் கண்டால் இறையருள் பெற்று நாம் விரும்புவதை நிச்சயம் பெற முடியும்.

ஆணவம் அகந்தையை அகற்றி சாந்தி, சமாதானத்துக்கு வழிகாட்டும் காலம் மஹா சிவராத்திரிக் காலமாகும்.

அடிமுடி தேடிச் சென்ற திருமாலுக்கும் பிரமனுக்கும் திருவண்ணாமலையில் அருள் கிடைத்ததும் இதே சிவராத்திரி நாளில் தான்.

பிரம்மா, விஷ்ணுவின் அகந்தை அடங்கி சிவன் தாழ் சரணடைந்து மனச்சாந்தி பெற்றதும் மஹாசிவராத்திரி நாள் தான்.

பிரமனும், விஷ்ணுவும் தங்களின் அறியாமையை நினைத்து சிவபெருமானின் ஜோதி வடிவைத்தை தரிசித்து சிவபெருமானே முழு முதற்கடவுளென ஏற்றுக் கொண்ட நன்நாளே மஹாசிவராத்திரி நாளாகும்.

# பழங்குடிகள் யார்?

ரோமில் உள்ள பல சமூக வகுப்புகளைக் குறிக்க பண்டைய ரோமானியர்களால் உருவாக்கப்பட்ட சொல்லிலிருந்து மருவியதே 'குக்குலம்' அல்லது 'பழங்குடி' என்கிற சொல். இடைக்காலத்தில், இந்தச் சொல் பல மொழிகளிலும் பல பகுதிகளிலும் தோன்றத் தொடங்கியது. குறிப்பாக நமது இந்திய துணைக்கண்டம் மற்றும் நவீன தெற்காசியாவில் அதிகம் புழக்கத்துக்கு வந்தது.

ஆபிரிக்க கண்டத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவில் பழங்குடியின மக்கள் அதிக அளவில் உள்ளனர். மக்களின் வாழ்க்கையையும் வணிகத்தையும் எளிதாக்கும் வகையில், பிரிட்டிஷ் காலனித்துவ சக்திகள் 'பழங்குடியினர்' என்கிற சொல்லை வித்தியாசமான முறையில் பயன்படுத்தினர்.

பழங்குடியினர் சமூக, பொருளாதார, பண்பாட்டு மரபுகள், பழக்கவழக்கங்கள் மற்றும் புவியியல் ரீதியாக, தனிமைப்படுத்தப் பட்டவர்கள் ஆவர். பெரும்பாலான பழங்குடியினர் மலைப் பகுதிகளில் வாழ்ந்தனர். அவர்களின் உணவு காடுகளில் இருந்து வந்தது. ஆயுதமற்ற பழங்குடி மக்களுக்கும் வெளிநாட்டு படையெடுப்பாளர்களுக்கும் இடையே நடந்த நியாயமற்ற மோதலின் சான்றுகள் நீண்ட காலமாக வரலாற்றில் இடம்பெற்றன. நாட்டு விடுதலைக்குப் பிறகு 'முன்னேற்றத்தை' நோக்கி பயணிக்கும்போது, மக்கள் தம் விடுதலையைத் தக்கவைத்துக் கொள்ள, பழங்குடி மக்களைக் மேலும் கட்டுப்படுத்தி, அடக்கும் நிலைப்பாட்டை எடுத்தார்கள்.

இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பத்து சதவீதம் பழங்குடியினர், நாட்டின் 22 சதவீத நிலப்பரப்பில் வாழ்கின்றனர். இந்தியாவில், நூறு வெவ்வேறு மொழிகளைப் பேசும் சுமார் நானூறு பழங்குடியினர் உள்ளனர். சுற்றுச்சூழலுடன் அமைதியாக இணங்கி வாழும் பழங்குடி மக்கள், தங்கள் காடுகளை விட்டு வெளியேறும் அச்சுறுத்தலை அன்றாடம் எதிர்கொள்கின்றனர்.

அரசின் பல வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் வனச் சட்டம் என்கிற போர்வையில் ஆயிரக்கணக்கான பழங்குடியின மக்கள் தினம் தினம் வெளியேற்றப்பட்டு, இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவில் நகரமயமாக்கல் மற்றும் அதன் வளர்ச்சிக்காக, சுமார் இருபத்தி இரண்டு லட்சம் ஏக்கர் காடுகள் தாரை வார்க்கப்பட்டுள்ளன. 'ஆக்கிரமிப்பாளர்கள்' என்கிற பெயரை 'நாம்' பழங்குடியின மக்களுக்கு சூட்டியுள்ளோம். சுரங்க நிறுவனமான வேதாந்தா போன்ற ஜாம்பவான்களுக்கு எதிராக நியம்கிரி மலைவாழ் பழங்குடியினர் நடத்திய போராட்டத்தைப் போன்ற வெற்றிக் கதைகள் இங்கு மிக மிகக் குறைவு.



காகிதத்தையேக் கண்டிராதப் பழங்குடியினர், காடுகளில் இருந்து வெளியேற்றப்படுவதலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள உரிமைப் பத்திரங்கள் வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறது அரசு. 'பழமையானவர்கள், பழங்குடியினர், பூர்வீகவாதிகள்' என்று எத்தனை விதமாக அவர்கள் குறிப்பிடப்பட்டாலும், அவர்களே ஆழமான பண்பாட்டு வரலாறைக் கொண்டுள்ள இயற்கையின் உண்மையான மனிதர்கள். நல்லிணக்கம், நிலைத்தன்மை மற்றும் எளிய வாழ்க்கையின் எடுத்துக்காட்டுகள். பல்லுயிர் பெருக்கத்தின் சிறந்த தூதுவர்கள். வலுவான உணர்ச்சிப் பிணைப்பின் தூண்கள்.

பல்லுயிர் சமநிலையை சீர்குலைக்கும் வகையில் அதிகமான காட்டு உயிரினங்களை அவர்கள் ஒருபோதும் வேட்டையாடவில்லை. அவர்களின் நீர் சேகரிப்பு நுணுக்கங்கள், விவசாயத் தொழில் நுட்ப அறிவு, நீர்ப்பாசன முறைகள், காட்டுயிர் தாவரங்களை மருந்துகளுக்குப் பயன்படுத்துதல், வானிலை மதிப்பீடு ஆகியவற்றைத் துல்லியமாகப் பதிவு செய்து காப்பது இன்றியமையாதது.

காற்று, கடல் மற்றும் பறவைகளின் அசைவை உணர்ந்து கொள்ளும் அந்தமானின் ஓங்கீஸ் பழங்குடியினர், சுனாமி அழிவிலிருந்து தங்களைப் பாதுகாக்க, கரையோரக் குடியிருப்புகளை விட்டுவிட்டு, காட்டுக்குள்ளிருந்த உயர்வான நிலத்திற்கு சென்று தங்களைக் காப்பாற்றி கொண்டனர். ஆர்க்டிக் பழங்குடியினர் தங்கள் நீர்த்தேக்கங்களைப் பாதுகாத்து வறட்சியை முன்னறிவிப்பவர்கள். அங்காமி பழங்குடியினர் வனவிலங்குகளை மீட்பதற்காக வேட்டையாடுவதைக் கைவிட்ட உன்னதமானவர்கள். ஜும்மா பழங்குடியினர் தங்கள் நிலத்தை 'மாற்றும் சாகுபடி முறை' பற்றி அறிந்துகொண்டதின் மூலம் தங்கள் நிலத்தை மீட்டுருவாக்கம் செய்தனர். பசிபிக் பகுதியில் உள்ள மீன்பிடி குழுக்கள் கடல் இனங்களைப் பாதுகாக்கின்றன.

பாக்காவின் பழங்குடியினர் சட்டவிரோத வேட்டையாடுபவர்களின் இருப்பைக் கண்டறிந்து தடுக்கின்றனர். டோங்ரியா கோந்த் பழங்குடியினரால் நீரோடைகள் பாதுகாக்கப்படுகின்றன. சோலிகா பழங்குடியினர் புலிகளை தங்கள் குடும்பமாக கருதுவதால், அவர்கள் சேகரித்த தேனில் சிறிதை அந்தப் புலிகளுக்கு உணவாக அளிக்கின்றனர். நூற்றுக்கணக்கான அணுக முடியாத பழங்குடியினரால் அமேசானில் காடழிப்பு தடுக்கப்படுகிறது. வம்பனோக் பழங்குடியினரால் யாத்ரீகர்கள் பட்டினியிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

இந்த கிரகத்தின் பல்லுயிரியலில் எண்பது சதவீதம் இந்தப் பழங்குடி மக்களின் நிலங்களில் உள்ளன. பழங்குடி சமூகம் முற்போக்கான நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு சமூகம். பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்ற அதிநவீனப் பண்பாடுகளின் சிக்கல்களைக்கூட பழங்குடிகள் திறம்படக் கையாண்டுள்ளன.

'பழங்குடிகள்' - இவர்களைப் பற்றி சொல்லப்படாத, எழுதப்படாத, கேட்கப்படாதவற்றை வெளிக்கொணர்வதும் வெளிப்படுத்துவதும் அவசியமானது.

பழவேற்காட்டின் பழங்குடிகள் - ஏனாதிகள் என்று அழைக்கப்படுபவர்கள்.

பழமையான அலையாத்தி வேர்களைக் கொண்ட காட்டையே பழவேற்காடு என்று அழைக்கிறோம். காலநிலை சமன்பாட்டைப் பேணும் அலையாத்தி காடுகளின் வேர்கள், நிலத்துக்கு அடியிலும், நீருக்கு வெளியிலும் இருக்கும் சுவாசவேர்கள் ஆகும். பழவேற்காட்டின் ஏனாதிகளும் அப்படித்தான்.

பழவேற்காடு ஏரியில் கழுத்தளவு நீரில் மணிக்கணக்கில் நின்று கொண்டு எந்த அவசரமுமில்லாமல் சிறிய மீன்கள், இறால்கள், மண் நண்டுகளை தங்கள் கைகளால் இயன்றவற்றை பிடித்துக் கொண்டு வீடு சேரும் எளிமையான மனிதர்கள் இந்த ஏனாதிகள். எனில், ஏனாதிகளும் பழவேற்காட்டின் அலையாத்திகளின் பழமையான வேர்கள் தானே?

ஒருவகையில் ஏனாதியும் பழவேற்காடும் இணைச் சொற்களே.

தங்கள் உயிரியல் அறிவைக் கொண்டு, தங்களைச் சுற்றியுள்ள அனைத்து விலங்குகள், பறவைகள், மீன்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களில் உள்ள பயனுள்ள தாவரங்களை நன்கு அறிந்து, பல்லுயிர் சமநிலைக்கு உதவும் ஏனாதிகளை ஆவணப்படுத்து அவசியம்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2025 இல் வெளியிடப்பெற்றது.